இலாஹி.

இறைசுமாநகரெனு மியற்பெயரணிந்த
நத்தம் செட்டிகுளந் தருகின் சித்தகத்தோப்பில்
சமாதி யமைந்த

ஸையது மகுமூதொலி அவுலியா
அவர்கள் மீதில்

# அலங்காரப்பதங்கள்

## முதற்பாகம்.

இஃது
ஷையூர் அஷ்டாவதானி
அ. ம சி. முசம்மதுமீரா ராவுத்தரவர்கள்
இயற்றியவை:

ஷையூர் தருகா புரொப்ரைட்டர்கள்
மீ. ச. முகம்மதுமீரா ராவுத்தரவர்கள்,
மு. சி. முகம்மதுமீரா ராவுத்தரவர்கள்
இவ்விருவர்க்ள் முயற்சியால்

ஷையூர் க. இபுராமு ராவுத்தரவர்கள் புத்திரன்
பெரியகாட்டான் ராவுத்தர்
அவர்கள் பொருளுதவியைக்கொண்டு

மதுரை வடக்குமாசிவீதி:
ஸ்ரீ ராமச்சந்திர விலாசம் அச்சியந்திரசாலையிற்
பதிப்பிக்கப்பெற்றது.

1916. (அணா 2.

QT: 4198w
NL
180505

இலாஹி.

இறைசுமாநகரெனு மியற்பெயரணிந்த
நத்தம் செட்டிகுளத் தருகின் சிந்தகத்தோப்பில்
சமாதி யமைந்த

## ஸையது மகுமூதொலி அவுலியா

அவர்கள் மீதில்

# அலங்காரப்பதங்கள்

## முதற்பாகம்.

இஃது
ஷையூர் அஷ்டாவதானி
அ. ம. சி. முகம்மதுமீரா ராவுத்தரவர்கள்
இயற்றியதை:

---

ஷையூர் தருகா புரொப்ரைட்டர்கள்
மீ. ச. முகம்மதுமீரா ராவுத்த ரவர்கள்,
மூ. சி. முகம்மதுமீரா ராவுத்த ரவர்கள்
இவ்விருவர்கள் முயற்சியால்

ஷையூர் க. இபுராமு ராவுத்தரவர்கள் புத்திரன்
பெரியகாட்டான் ராவுத்தர்
அவர்கள் பொருளுதவியைக்கொண்டு

மதுரை வடக்குமாசிவீதி:
ஸ்ரீ ராமச்சந்திர விலாசம் அச்சியந்திர சாலையிற்
பதிப்பிக்கப்பெற்றது.

---

(இதன்விலை) 1916. (அணா 2.

MADRAS

# சாற்றுக்கவிகள்.

## இறைசுயம்பதி, பரிமளதாஸ் அவர்களியற்றிய

அறுசீர்க்கழிநெடிலடி யாசிரிய விருத்தம்.

நவமணிமா டங்கண்மிசை நங்கையர்பூங் குழற்கூட்டும்
        நறைக டேமந்
தவழ்முகிலிற் சேர்வதினாற் பெயுமழைப்பின் னீர்கமழூர்
        தருக்கண் மேவும்
அவனிபுக ழிறைசுநகர் முகம்மதுமீ ராபதங்க
        ளறிந்தே வாணி
யெவனவுடல் வெளுத்துவே தனையடைந்தாள் கும்பன்மலை
        யேகி னானே.

## ஷெடியூர் ஒ. க. ஒய்யப்பதாஸியற்றிய

யமகம்.

அறுசீர்க்கழிநெடிலடி யாசிரிய விருத்தம்.

திருவமைந்த குவடுமணி நதிபரவுங் கழனிமலி
        சிறக்குஞ் சாலி
திருவமைந்த தடமிறைசுப் பதியின்வள ரஷ்டாவ
        தானி சிங்கம்
திருவமைந்த முகம்மதுமீ ராசையி தொலமீதிற்
        செப்பும் பாக்கள்
திருவமைந்த தேவருல கமுதினுமென் றுளமகிழ்ந்து
        செழிப்புற் றமால்.

இலாஹி.

## சையது மருமூதொலி அவுலியா அவர்கள்மீது

# அலங்காரப் பதங்கள்.

### காப்பு-விருத்தம்.

சீர்மருவு மிறைசுநகர் தன்னின் வண்ணஞ்
சிறந்திலங்குஞ் செட்டிகுளத் தருகிழ் பாரிற்
பேர்மருவுஞ் சஞ்சருகான் செல்வன் மிக்கப்
பிரபல்யன் முகம்மதுமீ ராமால் சொந்த
மேர்மருவும் புளியங்தோப் பிடஞ் சமாதி
யிருந்துதவுஞ் சைதுமரு மூதல் லாமேற்
பார்மருவுந் தண்டமிழ்ப்பா பதஞ்சங் கீதம்
பாடவருள் செய்யிறையே பணிந்தேன் மாதோ.

### ஆக்கியோன் பெயர்.

முத்தணிந் திலங்குநத்த நகரில் வாழு
முகம்மதியர் குலதிலகன் முகம்ம தென்போன்
சித்தமணிந் திருகண்ணின் மணியாய் வந்த
செல்வனினி யையாசு மதுர வாரி
சித்திரம்வித் தாரஅஷ் டாவ தானஞ்
செய்யுமுகம் மதுமீரா செப்பும் பாக்கள்
குத்தமிலா தமையவருள் செய்வல் லோனே
குறைசிகுலத் திருநபிதாள் சிரமேற் கொள்வாம்.

### அவையடக்கம்.

பதியினதி நிதியுளவர் பணித்தில் லம்போற்
பாலகர்கள் மணலகத்தைப் படைத்தல் போலும்
மதிமுதியோர் முனம்பித்தன் மொழிதல் போலும்
வையமிசை சைதுமரு மூதல் லாமேற்
றுதியுதவத் தருந்தமிட்பா பதஞ்சங் கீதஞ்
சொல்லிமீனன் வல்லகவித் துரைக ணேக்கில்
நதிசலந்துற் புனல்கொள்ளும் நெறிநேர் புந்தி
நாடுவீ ரெனக்கருதிப் பாடி னேனே.

## நான்முகப்-சிந்து.

### என்னடி நான்பெற்றமங்கை என்றமெட்டு.

அன்னம்பிடிநடைமாதே நவநீதே யடித்தாதே மீதா
னறியச்சொல்வேனு ளிப்போதே மிக
வரிதாகிய-தருமேவிய-திருவாயணி-தருகாவினி
லானந்தமேதருஞ் சேயே பிர்
மானந்தமேபெரு வாயே.

தங்கமேசந்தனக்கூடு பார்க்கநாடு நலந்தேடு நம்மள்
சையிதொலிபதம் பாடு அடி
தனிமாநவ-மணிமாலைக-டனபீதணி-வனமானினி
தானேநடந்துவா பேடு சொல்லு
மேவனேயலங்காரந் தோடு.

கோலநகையலங்காரி குழல்வாரீ முடிசிங்காரி கண்டு
கொள்ளிறைசுப்பதி ஊரில் கன
குடிமாடமே-யடிநேரிழை-படிமீறுள-தடமாவளங்
கொஞ்சியமஞ்சிதம்பாரு முடி
மிஞ்சியவீடுமா மேரு

செந்திருதங்கியஜோதி சடைவீதி குலஜாதி தொழில்
செய்யும்வியாபாரம் நீதி செழுங்
தேனேமட-மானேயிது-தானேயறி-நானேசொல
தேசவசீகரி ரோட்டுப் பாதை
வாகுடன்செல்லுவோங் கேட்டு

சாலையிற்செல்கிறபெண்கள் பாடும்பண்கள் மனக்கண்கள் தன்னைச்
சாடியிழுப்பதோ ரெண்கள் யில்லை
சமையத்தி-யிணங்காரூர-மமையத்தரு-தேமாதுளை
சாணுமுகம்மது மீரா தோப்பு
நாலுவீதங்களைப் பாராய்

தென்றலடிப்பதோர்ஜோக்குத் தாகம்போக்கும் நலமாக்கும் வனச்
சிங்காரம்போலங்கே நோக்கு மதி
தெள்ளுந்தமிழ்சொல்லுங்கவிவல்லோருளங்கொள்ளுஞ் செழுஞ்
சேமமுருஞ்செட்டி வாவிக் கரை
வாமமுளமதல்லாம் யாவி

மாமரச்சோலைகள்நாடும் மயிலாடுங் குயிற்பேடும் மண
வாளரோடும்வினை யாடுந் திரி
மதமாகரி-பதமாபல-விதமாமல-ரிதழார்சில
வாழைமரங்கள் பைந்தாரு போட்டு
வேழக்கோடொக்கும்நீ பாரு

கற்பகமேதருந்தேங்காய் கிணற்பாங்காய் வயற்சோங்காய் விளை
கன்னலுஞ்செந்நெல்லுமாங்காய்க் கனி
காணக்கிடை-யாதேமிக-யாணர்க்குழ-லாளேசுகன்
கன்னியே சைதொலி தருகா மூனம்
நன்னியேபாரடி திருவாய்.

## தரு.

இராகம் அடாணா, தாளம் ரூபகம்

பல்லவி.

மானேநீ வந்துபாரடி நம்மன்
வள்ளல்சைதுயகமூ தொலிசிரடி.

அநுபல்லவி.

தேனேமெஞ்ஞானத் தெளிவகமுற்றவர்
தினிறகுல்சல வாத்தருள்பெற்றவர்
கானேர்மொழிபுருக் கான்மறைகற்றவர்
கணியேநவ-மணியேயென-தணியேநத-லணியேதிரு (மானே)

சரணம்.

கற்பகமேதரு காவிலுறைந்தவர்
கல்புக்கனியாச் சமாதிமறைந்தவர்
அற்புதகாரண மியாவுந்நிறைந்தவர்
அஞ்சுங்கிளி-கொஞ்சும்மொழி-மஞ்சுங்குழல்-நஞ்சும்விழி (மானே)

செட்டிகுளத்தரு கீழ்பாரிசத்திலே
சிங்காரப்பூங்கா வனம்நேரிடத்திலே
யெட்டிநடந்துவா கிட்டுந்தடத்திலே
இளமாமயில்-வளமாகுயில்-அளமாவயில்-நளங்கோபயில் (மானே)

அஷ்டாவதானி முகம்மதுமீராசொல்
லானந்தமான பதம்பாடிகூறாநில்
கஷ்டம்வராதெந்தக் காலமுந்தாராவில்
கண்ணேயடிபெண்ணேயறி-சொன்னேன்வடிமின்னேமறி (மானே)

சந்தக்கலிவிருத்தம்.

ஐயுதுமேவலேநாகமதாகவணிந்தாடும்
பையதுலம்படிசெய்யவடங்கியபண்பாளர்
கையதுமாறுதநம்புரியிலுறைசுக்கதிகாரர்
சையதுமகமூதொலிநிகழேங்குந்தருகாவே.

## கண்ணிகள்.

### இராகம் தேசிகதோடி, தாளம் ரூபகம்.

காவுசெரிந்ததரு காவலங்காரமே
கண்ணே மிகவொய்யாரமே அதிதீரமே அடி
கன்னியேபாரு-அன்னியஞ்சாரு-மின்னியனேரு-முன்னணிச் சீரு.

வையம்புகழுமொலி சையதவுலியா
மாவடிக்கே மௌலியா ருவரியாய் நாடி
வந்துபணிந்து-விக்கையடைந்து-புந்தியுகந்து-பந்திநிறைந்த (காவு)

ரோட்டுத்தடத்தில்ஜனக்கூட்டத்தைப்பாரடி
நாட்டுப்புறுவே கூரடி வெகுஜோரடி மிக
நொச்சியினடி-வச்சிரஞ்சூடி-கெச்சிதங்கோடி-உச்சிதமேடி (காவு)

பஞ்சரத்திலஞ்சுகங்கள்கொஞ்சிவிளையாடுதே
செஞ்சொற்குயில்கள் பாடுதே மயிலாடுதே அடி
பாவையேதண்டு-மேவியேவண்டு-நாவையேகொண்டு-கூவியலகண்டு

சந்தனச்சோலைமீது மந்திநின்றுதாவுதே
தையலே பூகமேவுதே பாளைதூவுதே நீ
சன்னையாய்ப்பாரு-தென்னையினேரு-கன்னலஞ் சாரு-சொன்னயங்
கூரு (காவு)

வாழைபலாமாதினை மாகொய்யாவாசமே
தாழைமலர்செய் நேசமே விசுவாசமே யிது
மட்டடங்காது-தொட்டிடும்போது-விட்டிடயாது-கிட்டிடாத்தாது;

தேங்காய்க்கிணற்றருகின் மாங்காய்பழுக்குதே
தேனையளி சொலிக்குதே விழிசெழிக்குதே நல்ல
சித்திரச்சோலை-முத்திடிச்சாலை-பத்தினிமாலைஒத்திடுங்காலை (காவு)

சீரார்முகம்மதுமீ ராசொல்சங்கீதமே
தேவிசெவிகொண் ணுதமே மிருகீதமே அடி
சித்தினிமாதே-பத்தினிப்போதே-நத்தினியாதே-ஒத்தினியோதே.

## தரு.

தையலே பூலாக்கொடிப் பறக்குதுபார் பூாவா
ஸையது மகமூதருகாவில்,

1. தையலேபூலாக் கொடிப்பறக்குது
தருக்கள்நிறையா நிறைந்திருக்குது
ஐயமில்லாம லலிசிறக்குது
வானந்தமானந்த மாய்ப்பிறக்குது கண்ணே

மையலணிந்த வண்ணக்குயிலே
மரசதவடிவான மயிலே
செய்யகமலத் திலங்கும்பயிலே
தேனேமானே தெவிட்டாவொயிலே (மையலே)

2. செட்டிவாவித் தடத்தண்ணீரு
தினந்தினஞ்சனங் குளிக்குஞ்சீரு
யெட்டிநடந்து வந்துபாரு
யிலங்கும்ரோட்டுத் தடத்தினேரு அதோ

கட்டியிருக்கும் வணிகர்மனையே
கண்டோமென்றன் கருத்தினினையே
மட்டிடாத மீன்கள்சினையே
வாரிக்கொழிக்க வளஞ்செய்சுனையே (மையலே)

3. தருகரன்சானு முகம்மதுமீரா
சமத்தன்புளியந் தோப்பிதுநேரா
யருஞ்சிறைபிள வன்னமேகூரா
யமையும்பறவைக் குலந்தினம்பாராய் நல்ல

மருமலர்நறை வண்டுகளுண்டு
வாயிசைபாடும் நேரிசைகண்டு
வருவயேவடி மாதுநீரெண்டு
மாமுடிநெஞ்சினி லேந்தியேகொண்டு (மையலே)

180505

4. அந்தரதுந்துமி வீணைகள்போலே
ஆடிடுமணி யோசையினாலே
சுந்தரமாட மணிப்புறாமேலே
சூழ்ந்துமேவினே யாடல்கண்ணாலே—செழுங்

கந்தரக்குழல் மங்கைநீபாரு
கமழுங்கஞ்ச மலர்முகமேரு
சந்தனக்கூடு விந்தைமாஜோரு
தங்குந்தருகாவி லிங்கிர்தங்கூரு (மையலே)

5. தீனவர்கள் மகிழ்ந்துவானு
சிறப்புற்றோங்கி வளரும்நானு
ஆனுமானு சீனமூனு
அருளஷ்டாவ தானிதானு பாடும்

தேனுவொன்று வமுதம்நிகரு
தெள்ளுங்கவிதைச் சிந்துபகரு
மானூர்திலத வஞ்சிநகரு
வாழுஞ்சைய தொவிதானுகரு (மையலே)

---

மானூர்திலதவஞ்சிநகரு-என்பது இறைசுகரென்றநிக அதாவது கத்தம்.

## வேறு பதம்

வாழிகூறுங்கள் வனவேடர்காணீங்கள் யென்றமெட்டு.

வந்துசோடி இ சந்தல் விந்தைபாரடி இ
அந்தரமீதுள-சந்திரனுகிய-சுந்தரமாதனஞ்-சிந்தைகளித்திட. (வந்)

நத்தமாநகர் தன்னி லுற்றவர்முன்னில்
சத்தியமுத்தர்கள்-சித்துகள்மெத்தவி-யற்றியபத்தர்-துதித்தவொலிபதம்.

புரோப்புரைட்டர்களவர் தரப்பிலிஷ்டர்கள்
பொங்கியகீர்த்தி-யெங்கினுமேத்தி-தங்கியநேத்தி--கங்கொளாச்சீர்த்தி (வ)

மேளதாளங்கள் விநோதவாணங்கள்
மேடகமாலை-நாடகச்சாலை-யாடலஞ்சோலை-பாடலிக்காலை (வந்)

கூடிசிங்காரம் நத்தம் நாடலங்காரம்
கொஞ்சியேபேசி-வஞ்சியேநேசி-மிஞ்சியவாசி-ரஞ்சிதம்பூசி (வந்)

மொய்யுகம் புகழுஞ்சையதுமக
மூதொலிபாதம்-ஆதரவாக—வோதியநீதி-மாதினியாதி (வந்)

ஆவலாகநில் அஷ்டாவதானிசொல்
அற்புதப்பாக்கள்-கற்பகம்நீகல்-நற்பதியேனங்-தற்பரனீவன் (வந்)

## வேறு பதம்.

கனகசபாபதி தெரிசனமோர்நாள் யென்றமெட்டு.

இராகம் தன்யாசி, தாளம் ஆதி

பல்லவி.

சையதுமகமூதொலிநறுமலரடி
சார்ந்தோர் கலிநீங்கும்.

அநுபல்லவி

ஐயமில்லாமன தாகவேயனுதினம்
ஆதரவேதரவேதருவீரென (சைய)

சரணம்

இம்முடிவிங்கம னேக்தெழின் மொத்தம்
இருந்தரசியற்றிய விறைசுமா நத்தம்
செம்மையில்ஞ்சமா தியாகிய சித்தம்
சிறந்துறைந்தரபு நாடினியவர் நித்தம் (சைய)

தண்வளங்கொண்டசெந் தாமரைப் பாதர்
தனியவனிடந்துவா சனுகைகொண் ணீதர்
மண்வளங்கொண்டிவண் வந்தநந் நாதர்
மாவரந்தரும் வொலிமாநவ நீதர் (சைய)

1

ஆனைமானுசீனு முகம்மது மீரா
அஷ்டாவதானிசொல் லருந்தமிழ் பூராத்
தானுகலரவருள் தரும்வொளி நேராத்
தங்கியலிங்கிர்தத் தருகாமுன் வாராய் (சைய)

## பதம்.

அம்பாள்மதுரைமீனாட்சி யென்றமெட்டு.

வள்ளல்சையது மகமூதே கேட்ட
வரமருளுவீ ரிப்போதே கொடுக்க
வாதுசெய்யவொண்ணாதே
மலரடியிப்போதே-மலரடியிப்போதே-மலரடியிப்போதே (வள்)

விள்ளாதிருப்பதென்ன காயம் பதம்
வேண்டினேனதி சகாயஞ் செய்ய
வேணுஞ்சமயமிது ஞாயம்
விபரமதுபாயம்-விபரமதுபாயம்-விபரமதுப்பாயம் (வள்)

தொண்டர் வினையகற்று வீரே கலீ
சூழாதெணைக்காரும் பீரே ஜெக
ஜோதிவொளிவே வொலி நீரே
துயரமதுதீரே-துயரமதுதீரே-துயரமதுதீரே (வள்)

நத்தம்வா ழஷ்டாவ தானி பதம்
நவிலவழிதரும் நி தானி கன
நாதர்சூழுஞ் சீ மானி
நடிசரண்கோமானீ-நடிசரண்கோமானீ-நடிசரண்கோமானீ (வள்)

## பேயாட்ட வேடிக்கைத் தரு.

பல்லவி,

ஆட்டம்போடுதேடி பிசாசுக
ளாட்டம்போடுதேடி

1, நாட்டின்வயது மாதர்தாயி
நாயகமொலி தருகாவாயி
னாட்டமுடனில் கடகதுபோயி
நன்னியேவிலோ யாடும்பேயி (ஆட்)

2, கூட்டங்கூட்ட மாகவிருந்து
கூறுங்கோதை தலையைத்திறந்து
நீட்டங்கரிய முடிகள்பறந்து
நீலத்துமண்ணை யள்ளியெறிந்து (ஆட்)

## ஷெய்யது மகுமூதொலி அவுலியா அவர்கள்

3\. இராகமான பாட்டுச்சூடி
நாடகம்போ லொப்பாரிபாடி
தாகமான தனத்தைமூடி
சையதொலிவிசம் பதத்தைநாடி (ஆட்)

4 பட்டுரவிக்கைக ளிட்டுயிருக்க
பந்துபோல கொம்மைசிறக்க
கிட்டநின்ற மனிதர்சிரிக்கக்
கிழவியெல்லாங் கையைவிரிக்க (ஆட்)

5\. சிரிக்கும்வயது பயலைக்கண்டு
சிரிக்கிநெஞ்சில் நழுவத்தண்டு
முறுக்கிக்காட்டி மூடிக்கொண்டு
மூக்கைச்சிந்திக் காட்டும்பெண்டு (ஆட்)

6\. ஆசைக்கார நம்பிகள்கிட்ட
அடுத்துயிருந்து கத்தியதட்ட
பூசிக்கூசிப் பேசத்தொட்ட
புருஷன்வந்தா லழுகைமுட்ட (ஆட்)

7\. பாவாபாவா சையிதொலியே
பாவமெங்களை நீங்கும்வழியே
தாவாதாவா நிற்கும்நிலையே
சலாஞ்சலாமெனப் பணிந்துதலையே (ஆட்)

8\. கண்ணையுருட்டி மிரட்டிப்பார்த்து
கமலமுகங்கள் வேர்வைவேர்த்து
பண்ணுட்பிடித்த பேயைச்சேர்ந்து
பாவாசையி தொலிதாள்கார்ந்து (ஆட்)

9\. வேடிக்கைபார்க்க கிளைத்துமாது
வெளியிலேறிப் போனபோது
தாடிக்காரன் போலேயாது
தரவுடன்பயம் பிடித்தகூது (ஆட்)

10\. முட்டைக்கோழிக் கறிநெய்குர்மா
முருகுபலவு பழம்பால்திறமா
அட்டியில்லாது கொடுத்தாலூர்மா
யாடியோடிப் போவேன்புரமா (ஆட்)

11\. ஏலங்கிராம்பு வெற்றிலைபாக்கு
யிலங்குஞ்சுண்ணாம் புகலைநாக்கு
சிலமிகுந்த பொடிதாமூக்கு
தேடுதேகொடு ஓவாடுவேனுக்கு (ஆட்)

12. மிட்டாய்லட்டு சிலேப்பிநேராய்
மீ. ச. முகம்மது மீரா
மட்டில்லாது கொடுக்கவாரார்
வாங்கிப்புசித்துப் போரேன்பாராய் (ஆட்)

13. பேருகேட்டாற் சொல்லமாட்டோம்
பிரியமாக விருக்காட்டம்
மூறியேறு போலேவாட்டம்
மூணு சிணு மூணு நோட்டம் (ஆட்)

14. ஆடுமாடு வைத்துவாண்டோம்
அழகுநகைவஸ் திரங்கள்பூண்டோம்
பாடில்லாம லுண்டோந்தின்டோம்
பாவாசையி தொலிகையக்கண்டோம் (ஆட்)

15. சாம்பிராணிப் புகைகள்போடத்
தலையைமெள்ள வசைத்துகூடத்
தேம்பியழுது குலுக்கிமூடச்
சிருக்கிதெம்பாங் கிழுத்துப்பாட (ஆட்)

16. ஆடியமுக்க பேய்கள்போலே
அசந்துபடுக்கும் பெண்கள்மேலே
நாடியிருக்கும் பயல்முன்னாலே
நன்னித்தூக்கி யெடுக்கமாலே (ஆட்)

17. ஆத்தாள்பத்திர காளிதானே
அக்காள்சித்திர நீலிமானே
மூத்தாள்கா[illegible] மூணிதேனே
முகமினிக்கிய வேலிநானே (ஆட்)

18. அரசமரத்தி ஒடியிலிருப்பன்
அப்பன்பேரு அழகுகருப்பன்
புருஷன்கள்ளுக் குடியில்விரப்பன்
பூவையைப்பிறி யாமலிருப்பன் (ஆட்)

19. போரேன்போரே னென்றுகுளத்திற்
போயிவிழுகப் பயல்கள்நலத்தில்
வாரேனென்று வழுக்கிநிலத்தில்
மடியைத்தொட்டு யிளுக்கத்தலத்தில் (ஆட்)

20. சுருக்கலங்குலே யாலேயடிக்க
இருக்கேன்போரே னென்றுதுடிக்க
திருக்கஉச்சி மயிரைப்பிடிக்க
அஷ்டாவதானி பதங்கள்படிக்க (ஆட்)

## மங்கை க்ருசந்தலின் வனப்புரைத்தல்.

கந்தநாதா கருணைசெய்வாய் என்றமெட்டு.

இராகம் - இந்துஸ்தான் - தோடி - தாளம் - ஆதி.

பல்லவி.

வஞ்சிபாரே சந்தல் விநோதம்

அநுபல்லவி.

கொஞ்சியவஞ்சுகமே ரஞ்சிதவெஞ்சகமே
மிஞ்சியமதிமுகமே (வஞ்சி)

சரணங்கள்.

1. ஐயமில்லா துகந்து சையதொலிமுன்வந்து
கையேந்தியேபணிந்து. (வஞ்சி)

2. பந்துஜனங்கள்நாட்டம் இந்துகணங்களீட்டம்
சிந்துநேரானகூட்டம், (வஞ்சி)

3. தருகாவிடத்துள்மிகை நறுசாம்பிராணிப்புகை
பெருகாருடன்சேர்வகை (வஞ்சி)

4. வாசியிரதமண்டி தேசிசாரட்டுவண்டி
நேசிமும்மதமாதிண்டி (வஞ்சி)

5. வேடிக்கையானசாமான் தேடிக்கை யாடெம்பூமான்
வாடிக்கை வாணிபர்மான் (வஞ்சி)

6. லட்டுசிலேப்பிமிட்டாய் மட்டுப்படாமனெட்டாய்
பிட்டுவிற் பவர்கள்செட்டாய் (வஞ்சி)

7. மல்லிகைமுல்லையிரு வாட்சிசொரிந்ததரு
சொல்லிமுடியாதேமரு (வஞ்சி)

8. தேங்காய்பழங்கரும்பு மாங்காய்க்கனிசுரும்ப
பாங்காவருக்கை விரும்பு (வஞ்சி)

9. சானுமுகம்மதுமீ ஞானாயகனிடம்நீ
வானுன்கவிபாடமீ (வஞ்சி)

10. அஷ்டாவதானிபுகம் இஷ்டமதாகசிதம்
சிஷ்டையுடன்சொல்லிதம் (வஞ்சி)

## வஞ்சியுன்மேல் மோகமாகினள் என்றமெட்டு.

இராகம் - பியாகு - தாளம் - ரூபகம்.

பல்லவி.

கன்னியே மாவுன்னிதந்தரு
காமுனம்பாரு பந்தல்பூமணஞ்ஜோரு

அநுபல்லவி.

சொன்னயங்குயில் அன்னமேமயில் தோகையேசோலை
இன்னிலஞ்சேர் காவணத்துள விங்கிர்தந்தானே களி
பொங்கியமானே. (கன்)

சரணங்கள்.

1. பானுவின்கதிர் போலவேயெதிர் பரவுதேஜோதி
தேன்மொழியே பெரியகாட்டான் செடிவிளக்காலே—தரும்
வடிவடிமாலே (கன்)

2. சிரங்கன்குளம் நீரெங்கும்வளம் தேடகப்பூவு
ஆரங்கள்பூ கச்சரப்பனே அழகுதென்வானே—மரம்
சொரியுதேபானே (கன்)

3. மேடையுப்நறும் வாடையுந்தரும் மெல்லியேமகமல்
ஆடையுமே கட்டினரசு மான்கிரிபோலே—அது
தான்கனிவேலே (கன்)

4. வேதமோதிய வோதையுமவு லாதுசிங்காரம்
நீதிவெள்ளை யப்பசாகிபுகீட்டிய ராகம்—காதிற்
கேட்டிடத்தாகம் (கன்)

5. மூனுசினுமுகம்மதுமீரா முன்னணிச்சீராய்த்
தானுமெச்சித் தலையசைத்திடுஞ் சையலைப்பாராய்—அடி
தையலேகூராய் (கன்)

6. அஷ்டாவதானி முகம்மதுமீரா வருளுஞ்சங்கீதம்
இஷ்டமுடன் படித்தவர்மன தின்பமேசேரும்—வருந்
துன்பமுந்தீரும் (கன்)

மங்கையே காசிமாநகரமிதோ என்றமெட்டு

பல்லவி.

அன்னமே சந்தற்கூடு விநோதத்தை நாடுவாயேயடி.

அநுபல்லவி.

அன்னமேபாரிந்த உன்னதமாய்வந்த
அம்புலிநேர்கதிர் கெம்பீரமாயிந்த
மின்னியசிங்காரங் கண்ணுடியாலெழில்
மிஞ்சம்பக லஞ்சும்படி வஞ்சியினி செஞ்சொல்லிடும் (அன்)

சரணங்கள்.

1. சித்திரமாய்நவ ரத்தினங்கள்சூடி
செய்யிதருமு தொலிபதமேநாடி
பத்திபத்தியாகத் தீபங்களின்சோதி
பனிமாமலர் தனிமாலைக ணனிவாசனை கனிபூகமே (அன்)

2. காதலியேகர சற்பதியின்னூடு
காதிர்மீராலெப்பை கைப்பணியேகூடு
ஆதரவாநிதி யிட்டசானுமூனு
அங்கம்புவி யெங்கும்பிர சங்கந்தர தங்கந்தரு (அன்)

3. வலமிட்டுஞ்சுற்றி வருவதைநீபாரு
வான்சிகரத்தலங் காரமகாமேரு
தலமிசையேஜனக் கூட்டத்தையேகண்ணுல்
சற்றேபறி முத்தேவுயர் பொற்றேரென முற்றுஞ்சொலும் ()

4. தீன்கொடியென்னுஞ் ஜெண்டாமுடியேவிண்ணிற்
சென்றுமுகின்மழைக் காலெனவேமண்ணிற்
றொன்றியவாடைகாற் றூலேயசைவதை
துணையோரென மணிமீதன முணவாவெணு மிணையாகுதே ()

5. சக்கரைபத்திசாம் பிராணிகமழுது
சந்தனவாடைக ளெங்குந்திகழுது
பக்கிர்தபசிகளாட்டஞ் ஜொலிக்கவே
பகரங்கன நிகரங்களை சிகரந்தன வொகரந்தெரி (அன்)

6. அண்டமுகடுடை வாணங்கள்மீறுது
அங்குள்ளநட்சேத்தி ரங்கனம்பேருது
மூண்டகமாதேமத் தாப்புதீவட்டிகள்
மூன்னேவடி சொன்னேனடி மின்னேநெரி யின்னேரமே (அ)

7. மேளதாளத்தொனி மேகத்திடிபோலே
மேதண்டமேவோசை முழங்குதுமுன்னாலே
சாளரமேமாடி மங்கைவதனங்க
டானேயலி மானேமுடி கானேருரை யானேரிள (அன்)

8. ஆலத்தியேந்தும் அரம்பையர்கூட்டத்தை
அஞ்சுகமேபாரு. கெஞ்சியநாட்டத்தை
ஜாலத்தொழிற்சிலம் பக்காரர்வேடிக்கை
சங்கந்தெரு வெங்குங்களி பொங்குந்திரு வங்கங்குல (அன்)

9. நத்தழ்நகர்தெரு வீதியெல்லாஞ்சுற்றி
நாதர்சையதொலி கோரிமுன்னேபற்றி
ரத்தினமேசந்த னக்கூடுவந்தது
நாடுந்துய ரோடுஞ்சுகங் கூடும்பதந் தேடும்மட (அன்)

10. கஞ்சினிமார்நட னம்புரிந்தாடிட
காளையர்பற்றி மதக்கவிசூடிட
வஞ்சியிதோபணி பாத்திஹாவோதியே
வல்லோனணி நல்லார்துவா பல்லோர்செய வுல்லாசமே (அ)

11 மின்னேகேளஷ்டாவ தானிமுகம்மது
மீராசொலும்பதம் பாடச்சுகமிது
கன்னல்ரசம்போ லுறைக்கிறேநீகேளு
காதுக்கினி தாகுந்திரு மாதுக்குண வாகுந்தரு (அன்)

## கலித்துறை.

உல்லாசமேவிய பெண்ணரசேதுவா வோதியபின்
சலலசபமாகத் தருகாவில்வந்த ஜனங்களுக்கு
அல்லாவருள்பொங்குஞ் சையிதொலி நாருசாயீகவே
நல்லாவளித்தனர் கந்தூரிபோஜனம் நாடுவமே.

## அச்சிட்டவரலாறு ஆசிரியம்.

சீர்மருவு செங்கமல வாவிதிக ழுங்கழனி
    செந்நெல்விளை இறைசு நகரில்
செட்டிவா வித்தடங் கீழ்பாரிசத்திலே
    செய்யதகு மதுமூதொலி

பேர்மருவு தருகாவில் ச. மு. சந்தல்
    பிரபல்யமாய் நடத்தப்
பிரியமுட னஷ்டாவ தானிசெந் தமிழினாற்
    பேசுசங்கீத மதுரம்

தார்மருவு திண்புயன் வள்ளலிபுரூமுரா
    வுத்தரெழி லானபுத்ரன்
தருகரன் பெரியகாட் டானதிக சந்தோஷ
    சாகரம் நிறையுற்றவன்

ஏர்மருவ லங்கார கிர்த்தன மரங்கேற்ற
    ஏற்றுதண் டிகைசால்வையும்
இனியபொரு ளுந்தந்து அச்சிடக்செய்தனன்
    இறையவா வருள்புரிவையே:

## அலங்காரப்பதங்கள்

முற்றிற்று.

☞ இனி இரண்டாம் பாகங் கூடியசீக்கிரம் அச்சிடப்படும்,